பக்கங்கள் நான்கு விலை ரூபா/- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 103 பிரமோதூத மாசி 26 (10-03-1991) ஞாயிறு

## உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கத்துக்கு கப்பல் மூலம் உணவுப் பொருள்கள்

உடுப்பிட்டி பல நோ. கூட்டுறவுச் சங்கத்திற்கான 500 மெற்றிக் தொன் உணவுப் பொருள் அடுத்து வரும் 'குமண' கப்பலில் இங்கு வரவுள்ளது. இச்சங்கத்தின் இயக்குநர்கள் கொழும்பில் எடுத்த தீவிர முயற்சியால் இவை இங்கு கப்பலில் கொண்டுவரப்படுகின்றன. கொழும்புத்துறைமுகத்தில் வைத்து இப்பொருள்கள் ஏற்றப்பட்டு விட்டதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனை அடுத்து குடாநாட்டில் உள்ள ஏனைய கூட்டுறவுச் சங்கங்களும் கப்பல் மூலம் உணவுப் பொருள்களைக் கொண்டுவர நடவடிக்கை எடுத்துவருவதாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவித்தன; தரைமார்க்கமாக இப்பொருள்களைக் கொண்டுவர ஐந்து லட்சம் ரூபா செலவாகிறது என்றும் கப்பலில் தருவிக்க 25 ஆயிரம் ரூபாவே செலவாகிறது என்றும் கூட்டுறவு வட்டாரங்கள் தெரிவித்தன. (66)

# பல்கலைக்கழகக் கல்லூரிகள் தமிழ்ப்பகுதிகளுக்கு இல்லை

## இராணுவ கேந்திரங்களுக்கு அருகில் நிறுவி கட்டுப்படுத்த அரசு முடிவு

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கான உத்தேச பல்கலைக்கழகக் கல்லூரிகளை எல்லைப்புறங்களில் நிறுவ அரசு முடிவு செய்துள்ளதாக நம்பகமாகத் தெரியவருகிறது. வடக்குப் பல்கலைக்கழகம் வவுனியாவிலும், கிழக்குப்பல்கலைக்கழகக்கல்லூரி அம்பாறையிலும் நிறுவப்படவுள்ளனவாம்.

பல்கலைக்கழகக்கல்விபெறத் தகுதியுள்ள பல்லாயிரம்மாணவர்களுக்கு தற்போதைய நடைமுறையில் உயர் கல்வி வாய்ப்பு மறுக்கப்படுவதே பிரச்சினைகளுக்குக் காரணம் என்றும் அதைத்தீர்க்கும் முகமாக மாணவர்கள் ஆணைக்குழு பல்கலைக்கழகக் கல்லூரிகளை நிறுவ தீர்மானித்துள்ளதும் தெரிந்ததே.

ஒவ்வொரு பல்கலைக்கழகக் கல்லூரியும் ஒரு பல்கலைக் கழகத்தின் மேற்பார்வையில் இயங்கவேண்டியிருக்கும். இதன்படி, வடக்கு பல்கலைக் கழகக்கல்லூரி யாழ் பல்கலைக்கழகத்தின் கீழும், கிழக்குப்பல்கலைக்கழகக் கல்லூரி கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கீழும் இயங்கும் என முன்னர்

—04 ஆம் பக்கம் பார்க்க

## தீவுப்பகுதிகளில் இரவு நேரம் ஷெல் தாக்குதல்கள்

ஊர்காவற்றுறை, காரைநகர், பலாலி முகாம்களில் இருந்தும் இராணுவத்தினர் ஷெல் தாக்குதல் நடாத்தியுள்ளனர். நேற்று முன்தினமிரவும் நேற்றுக் காலையும் இத்தாக்குதல்கள் நடைபெற்றன.

ஊர்காவற்றுறை முகாமிலிருந்து சின்னமுவாய் பகுதிக்கும், காரைநகர் முகாமிலிருந்து தோப்புக்காட்டுப் பகுதிக்கும் நேற்று முன்தினமிரவு ஷெல் தாக்குதல் நடைபெற்றது. காலையில் வல

—04 ஆம் பக்கம் பார்க்க

## மூட்டுச்சேனையில் ஒருவர் கொலை

திருமலை மாவட்டத்திலுள்ள வெருகல் இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் நேற்றுக் காலை 10 மணியளவில் மூட்டுச் சேனைப் பகுதியைச் சுற்றிவளைத்து பூ. இரத்தினசிங்கம் என்பவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர். (71)

## வீரமரணம்

நேற்றுக்காலை 10 மணியளவில் மாவிட்டபுரம் இராணுவமுகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் முன்னேறமுயன்றபோது ஏற்பட்ட மோதலில் லெப். வீரா (தம்பிமுத்து தர்மசீலன், ஏழாலூர்) வீரமரணத்தை தழுவிக்கொண்டார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர். (71)

## மட்டக்களப்பிலும் ஹெலி தாக்குதல் ஆரம்பம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஐயியார்வெட்டை கல்வெட்டை, விளான் தோட்டம் ஆகிய பகுதிகளில் ஹெலியில் இருந்து பரவலாக மோட்டார் ஷெல் தாக்குதலும் துப்பாக்கிப் பிரயோகமும் நடாத்தியுள்ளது.

கடந்த புதனன்று இரவு 12 மணியளவில் நடந்த இத்தாக்குதலில் 3 பிள்ளைகளின் தாயும் தந்தையும் படுகாயமடைந்தனர். இதில் ஒரு வீடும் சேதமடைந்தது.

இதே வேளை துன்பன்

—04 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டுறவுச்சங்கங்களுக்கு 80லட்சம் ரூபா கிடைக்கும்

யாழ் மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குரிய நிவாரணக் கொடுப்பனவுகளை வழங்க உணவுக் கூட்டுறவுத்துறை அமைச்சு 80 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இவ் மாதம் யுத்தம் ஆரம்பித்த நாளிலிருந்து நிவாரணப் பொருள்களை லொறிகளில் ஏற்றி இறக்கிய செலவும், இக்காலப்பகுதியில் கூட்டுறவு ஊழியர்கள் கடமை பாற்றியமைக்கான அபாயக் கொடுப்பனவாகவுமே இத்தப் பணம் வழங்கப்படவுள்ளது. (66)

## கருணாநிதி கண்டனம்

## ஆட்சி கலைப்பை நியாயப்படுத்த அகதிகள் அநியாயமாக கைது

தி. மு. க. ஆட்சியை கவிழ்த்தமையை நியாயப்படுத்த தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் அநியாயமாக கைது செய்யப்படுகின்றனர். இவ்வாறு தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி கண்டனம்

—04 ஆம் பக்கம் பார்க்க

## சைக்கிளில் வவுனியாசெல்ல இராணுவ பாஸ் தேவை

யாழ் வீதி பக்கமிருந்து வவுனியா நகருக்குள் சைக்கிள் சகிதம் நுழைவோர் இராணுவ நகர கமாண்டரிடம் பாஸ் எடுக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சைக்கிள் பாஸ் இன்றி நகருக்குள் சைக்கிள் எடுத்துச் செல்ல முடியாது என படை

—04 ஆம் பக்கம் பார்க்க

## மடுமாதா அகதிகள் தொடர்பாக கத்தோலிக்க திருச்சபை மௌனம்

மடுமாதா தேவாலய அகதிகளை வெளியேற்றுவது குறித்து கத்தோலிக்க திருச்சபை எதுவித கருத்தும் வெளியிடவில்லை எனக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மடுமாதா தேவாலயத்தில் வழமையாகவே யாத்திரிகர்கள் தினமும் வந்து தங்கிப் போவதுண்டு அதுவும் சிலர் நாள்கணக்கில் வந்து தங்கு

## வவுனியா காடுகளை நோக்கி ராணுவம் கடும் ஷெல் தாக்கு

வவுனியா இராணுவ முகாம்களில் இருந்து நேற்று முன்தினம் காட்டுப்பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்கு... டுப்பகுதி நோக்கி கடும் ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டது. இரவுவரை தாக்குதல்கள் தொடர்ந்தன. (71)

## மன்னார்த்தீவுக்குள் செல்ல

வழமையாகவே யாத்திரிகர்கள் தினமும் வந்து தங்கிப் போவதுண்டு அதுவும் சிலர் நாள்கணக்கில் வந்து தங்குவார்கள்.

இப்படியிருந்தும் அப்பாவி அகதிகளை வெளியேறுமாறு அரசு விடுத்த அறிவிப்புத் தொடர்பாக இலங்கையில்

—04 ஆம் பக்கம் பார்க்க

வவுனியா இராணுவ முகாம்களில் இருந்து நேற்று முன் தினம் காட்டுப்பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்கள் நடைபெற்றன.

காலைமுதல் மரக்காரம்பளை, புதுவீதி பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து ஹெலி ஒன்றும் தாக்குதல் நடாத்தியது.

தாண்டிக்குளம், பூந்தோட்டம் முகாம்களில் இருந்தும் சூடுகிரி கழாங்குளம் காட்டுப்பகுதி நோக்கி கடும் ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டது. இரவுவரை தாக்குதல்கள் தொடர்ந்தன. (71)

# மன்னார்த்தீவுக்குள் செல்ல பொதுமக்கள் அச்சம்

மன்னார்த் தீவில் இருந்து வெளியிடங்களுக்கு மக்கள் செல்ல இன்னமும் அச்சம் தெரிவிக்கின்றனர்.

வங்காலைச் சம்பவத்தை அடுத்தே இவர்கள் வெளி இடங்களுக்குச் செல்ல முடியாதுள்ளனராம்.

இதேபோல மன்னார்த் தீவுக்குள் செல்வதற்கும் வெளியிடத்தவர்கள் அஞ்சுகிறார்கள்.

மன்னார்த்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களைத் தவிர ஏனைய பகுதியினர் செல்லும்போது அடையாள அட்டையைப் பார்த்து படையினர் பல்வேறு கேள்விகளைக் கேட்கின்றனராம். (33)

# புதிய பாதுகாப்பு அமைச்சருக்கு ஈ. பி. டி. பி. நேரில் வாழ்த்து

புதிய பாதுகாப்பு ராஜாங்க அமைச்சராக பதவியேற்ற பிரதமர் டீ. பி. விஜேதுங்கவுக்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ. பி டி. பி.) நேரில் சென்று வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

இதன் செயலதிபர் டக்ளஸ் தேவானந்தா அரசியல் செயலாளர் என். ரமேஷ், பேச்சாளர் வெதாசன் ஆகியோர் ஜனாதிபதியின் சுசரித்த இல்லத்தில் வைத்து வாழ்த்

—04 ஆம் பக்கம் பார்க்க

# தாண்டிக்குளம் துப்பாக்கிச்சூடு 3 புளொட் உறுப்பினர்கள் பலி

தாண்டிக்குளம் பகுதியில் புளொட் குழுவினைச் சேர்ந்த மூன்றுபேர் விடுதலைப்புலிகளால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை 10.45 மணியளவில் தாண்டிக்குளம் சோதனைச் சாவடியில் பொதுமக்களை இந்த புளொட் உறுப்பினர்கள் சோதனை நடாத்திக் கொண்டிருந்தனர். இவர்கள் மீது புலிகள் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் மூவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர் இவர்களிடம் இருந்து ரி-81 துப்பாக்கிரவை கூடுகள்-4, ஐ.எம்.ரவைகள்- 85 என்பன விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டன. (71)

# தபாற் பொதிகளையும் இராணுவம் சோதனையிடுகிறது

முல்லை மாவட்டத்துக்கு கொழும்பிலிருந்து வவுனியா வரும் தபாற் பொதிகள் வவுனியாவிலிருந்து எடுத்து வரப்படும் பொழுது வவுனியா இராணுவ தடை முகாமில் தபாற் பொதிகள் இராணுவத்தினரால் வெட்டப்பட்டு சோதனையிடப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் தபாற் பொதிகள் எடுக்கச் செல்லும் ஊழியர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரியவந்துள்ளது. (33)

# இடைக்கால பிரதமராக பதவி ராஜீவ் காந்தி மறுக்கிறார்

இடைக்கால அரசுக்கு தாம் தலைமையேற்கப்போவதில்லை எனராஜீவ்காந்தி அறிவித்துள்ளார். தேர்தல் மூலமே புதிய தலைமை தீர்மானிக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதனால் தற்போதுஇடைக்கால தேர்தலுக்கு உத்தரவிடுவதை தவிர வேறு வழி ஜனாதிபதி வெங்கட்ராமனுக்கு இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் இடைக்கால பிரதமராக இருக்கும் சந்திரசேகரை ராஜீவ்காந்தி தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு பேசியதாக தெரி

—04 ஆம் பக்கம் பார்க்க

## தற்கொலை

வியாபாரத்தில் ஏற்பட்ட நஷ்டம் காரணமாகத் தாயாருடன் சண்டையிட்டு மன

=04 ஆம் பக்கம் பார்க்க

# கணவன் இறந்தமைக்கு இரு பெண்கள் நஷ்டஈடு கோரல்

வன்செயல் காரணமாகக் கணவன் இறந்தமைக்கான நஷ்டஈடு கோரி இரு பெண்கள் வெவ்வேறு உதவி அரசாங்கஅதிபர் அலுவலகங்களில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர். இது தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருவதாக செயலக பொதுசனத் தொடர்பு அதிகாரி எஸ். ஐ. நித்தியராஜ் தெரிவித்தார். இப் பெண்கள் இரு

— 4-ஆம் பக்கம் பார்க்க

# எயர்லங்கா விமானத்தில் தமிழ்ப்பயணிகள் புறக்கணிப்பு!

## வாசிப்பதற்கு தமிழ்பத்திரிகைகள்கூட வழங்கப்படுவதில்லை!!

எயர் லங்கா விமானத்தில் பயணம் செய்யும் பயணிகள் திட்டமிட்ட அடிப்படையில் புறக்கணிக்கப்படுவதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விமான சேவையில் பயணம் செய்வோருக்கு பயணத்தின்போது வாசிப்பதற்கு இலங்கையில் வெளியாகும் பல்வேறு தினசரி செய்திப்பத்திரிகைகள் போதுமான அளவு வழங்கப்படுகின்றன. ஆனால் தமிழ்ப் பயணிகளுக்கு வாசிப்பதற்கு தமிழ்ப்பத்திரிகைகள் எதுவும் வழங்கப்படுவதில்லை.

பயணிகள் தமிழ்ப்பத்திரிகைகளைக் கேட்டால் கூட 'கைவசம் இல்லை' எனப் பதிலளிக்கப்படுகின்றதாம்.

தமிழ் நாட்டுக்கு மாத்திரம் திருச்சிராப்பள்ளி, திருவனந்தபுரம், சென்னை ஆகிய மூன்று சேவைகளை எயர்லங்கா நடாத்துகின்றது இவற்றில் தமிழர்களே கூடுதலாகப் பயணம் செய்கின்றனர்.

அத்துடன் எயர்லங்காவின் ஏனைய சேவைகளில் பயணம் செய்வோரிலும் கணிசமான அளவினர் தமிழர்களே என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது. (74)

## சந்தைவாய்ப்பின்மையால் செய்கை பாதிப்பு; முந்திரிகை விலை மேலும் அதிகரிப்பு!

குடாநாட்டில் முந்திரிகைச் செய்கை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாய வட்டாரங்கள் தெரிவித்தன.

பெருமளவு முந்திரிகைக் கொடிகள் பராமரிப்பின்மையால் அழியவிடப்பட்டுள்ளதால் முன்னர் முந்திரிகைச் செடிகள் படரவிடப்பட்ட பகுதிகளில் பாவல், புடோல் செடிகள் செய்கை பண்ணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

இதனால் தற்போது ஒரு கிலோ முந்திரிகைப்பழம் 40 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

போக்குவரத்து வசதியின்மையால் சந்தைப்படுத்தல் வாய்ப்பு பாதிக்கப்பட்டமையே முந்திரிகைச் செய்கை வீழ்ச்சியுற்றமைக்கான பிரதான காரணமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ப-2)

### பீற்றூட் செய்கையில் நாட்டமில்லை

யாழ் குடாநாட்டின்பலபகுதிகளிலும் பீற்றூட் செய்கையை பல விவசாயிகள் கைவிட்டுள்ளனர்.

எரிபொருள் தட்டுப்பாடு, விலைவீழ்ச்சி, சந்தைப்படுத்தல் வசதியின்மை ஆகியவையே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-2)

### தொழிலாளர் கற்கை நெறி

யாழ் பல்கலைக்கழகம் நடாத்தவுள்ள தொழிலாளர் கற்கை நெறிக்குக் கல்வித் தகமை எட்டாம் வகுப்பு (ஆண்டு ஒன்பது) ஆக இருந்தபோதும், பத்து வருடத்துக்கு குறையாத வேலை அனுபவம் உள்ளவர்களைப் பொறுத்தவரை இந்நிபந்தனை தளர்த்தப்படலாம் எனப் பதிவாளர் தெரிவிக்கிறார்.

## குவைத்திலுள்ள கண்ணிகளை அகற்ற மேலும் ஆறுமாத காலம் பிடிக்கும்

குவைத்திலுள்ள நிலக்கண்ணிகளை அகற்ற ஆறு மாத காலம் பிடிக்குமென்றும் அப்படி இருந்தும் சில கண்ணிகள் தப்பி விடக் கூடும் என்றும் எதிர்காலத்தில் இவை அபாயமாக இருக்கக் கூடும் என்றும் அமெரிக்க பிரிகேடியர் ஜெனரல் ரிச்சர்ட் நீல் கூறியுள்ளார்.

ஐந்து லட்சம் நிலக்கண்ணிகள் குவைத்தில் புதைக்கப்பட்டுள்ளன. குவைத் துறைமுகங்களை மீண்டும் இயங்கச் செய்யும் வகையில் தற்போது கண்ணிகள் அகற்றப்பட்டு வருகின்றன. (74)

### வேலணைக் கோட்ட விளையாட்டுப் போட்டி

22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேலணைக் கோட்ட மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகள் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் வேலணைக் கோட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளும் கலந்து கொள்ளும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (74)

### தேசப்படமும் சிங்களத்தில் மட்டுமே

இலங்கைத்தேசப்படப் புத்தகத்தின் பாடசாலைப் பதிப்பு ஒன்று சிங்களத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

காணி நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சரின் பணிப்பின் பேரில் நிலஅளவையாளர் நாயகம் வெளியிட்டுள்ள புதிய பதிப்பில் 43 இலங்கைத் தேசப்படங்கள் பதிக்கப்பட்டுள்ளன

எனினும் இப் பதிப்பின் தமிழ்ப்பிரதி இன்னும் வெளியிடப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (74)

### தர்மக்கேணியில் சின்னம் சூட்டும் விழா

பளை கொத்தணி பிரிவில் உள்ள தர்மக்கேணி அ.த.க. பாடசாலையின் குருளைச் சாரணர் சின்னம் சூட்டுவிழா அண்மையில் நடைபெற்றது.

இங்கு 18 குருளைச் சாரணர்களுக்கு முதல் முறையாக சின்னம் சூட்டப்பட்டது. பளை மகா வித்தியாலய குழுச் சாரணத் தலைவர் சின்னம் சூட்டு விழாவிற்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.


### சிறு விளம்பரம்

**ஜோதிடம்**

சாயி பாபா மறுபிறவி - பிரேம சாயி பாபாவின் வரலாறுகளும், படங்களும், ஜோதிட நூல்களும் விற்பனைக்குண்டு. ஜோதிட ஆலோசனைகளுக்கும், விளக்கங்களுக்கும்: PROF. சத்தியதாஸன், ஞானம் ஸ்ரோர்ஸ், சித்தன்கேணி


## 5 வருட சம்பள முற்பணக் கடன் அரசஊழியர்களுக்குக் கிடைக்கும்

அரசாங்க ஊழியர்களுக்கு ஐந்துவருட சம்பள முற்பணக் கடன்கள் வழங்கப்படவுள்ளன.

துயர்துடைப்பு, வீடமைப்பு, வாகனக் கொள்வனவு, கட்டிட நிர்மாணம் போன்ற தேவைகளுக்கு இக் கடன்கள் வழங்கப்படும்.

மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் இது பொருந்தும்.

இதுவரை காலமும் இத்தேவைகளுக்கு இரண்டு வருடக் கடனே வழங்கப்பட்டு வந்தது.

கட்டிட நிர்மாணம் அல்லது வீடமைப்புக்கென கடன் பெறும் பட்சத்தில் ஊழியரின் மாதாந்தச் சம்பளத்தில் கழிக்கப்பட வேண்டிய தொகை ஐம்பதுசதவீதமாக இருக்கலாம் முன்னர் நாற்பது சதவீதமே கழிக்கப்பட்டுவந்துள்ளது.

கட்டிட நிர்மாணத்துக்கு அல்லது வீடமைப்புக்கு வழங்கப்படும் கடனுக்கு 12 சதவீத வட்டியும், வாகனக் கொள்வனவு மற்றும் துயர் துடைப்பு போன்ற தேவைகளுக்கு வழங்கப்படும் கடனுக்கு 7.2 சதவீத வட்டியும் அறவிடப்படும். (34)

### முகாமைத்துவ கற்கை நெறி

திறந்த பல்கலைக்கழக யாழ் பிரதேச நிலையத்தில் முகாமைத்துவக்கற்கை நெறி (1990) பயில விண்ணப்பித்தவர்களுக்கான பதிவு இம்மாதம் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சரியான முறையில் விண்ணப்பித்துத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு உரிய பதிவு ஆவணங்கள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ப-7)

## உள்ளூராட்சிசபைத் தேர்தலில் 87 லட்சம் பேர் வாக்களிப்பர்

புதிய உள்ளூராட்சி சபைகள் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் இயங்க ஆரம்பிக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் திகதிகள் விரைவில் அறிவிக்கப்படவுள்ளன. இதற்கான வேட்பாளர் மனுக்கள் இம்மாதம் 21 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை

சபைகளுக்குமான தேர்தல்கள் அவசரகாலச்சட்ட விதிகளைப் பயன்படுத்தி ஆறு மாத காலத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### கஜவாகிமலை யாத்திரை ஆரம்பம்

## பணத்துடன் வந்தவர் காணாமற் போனார்

கொழும்பிலிருந்து மூன்று இலட்சம் ரூபா பணத்துடன் வந்த யாழ் வியாபாரி வவுனியாவில் காணாமல் போய் இருப்பதாக வர்த்தக வட்டாரத்தில் பேசப்படுகின்றது.

வேலணை - புளியங்கூடல் தீவைச் சேர்ந்த உதயசூரியன் என்ற வியாபாரி பெருந்தொகைப் பணத்துடன் வந்த வேளை வவுனியாவில் காணாமல் போய் இருக்கின்றார்.

இவருக்கு நடந்தது என்ன என்பது தெரியவில்லை.

புகையிலை விற்று விட்டு வந்த வேளையில் காணாமல் போயுள்ளார். (11)

## ஜே. ஆரின் உடல்நிலை பாதிப்பு!

## அடிக்கடி அவஸ்தைப்படுகிறாராம்!!

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா மார்புச்சளியுடன் கூடிய புளு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது

இவருக்கு தற்பொழுது சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாக முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆரின் செயலாளர் மாப்பிட்டிகம தெரிவித்துள்ளார்.

மார்புச்சளி காரணமாக ஜே ஆர் பெரும் அவஸ்தைக்கு உள்ளாகியுள்ளதாகவும் அவருக்கு இப்போது அடிக்கடி உடல் நலக்குறைவு ஏற்படுவதாகவும் வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன. (74)

## சம்பளம்பெற நேரில் வரவேண்டும்; ஆசிரியர்களுக்கு அதிகாரி பணிப்பு

வேலணைக் கோட்டக் கல்விப் பகுதியில் கடமையாற்றும் சகல ஆசிரியர்களும் தமது சம்பளத்தை அதிபர்களிடமிருந்து சம்பளப் பத்திரத்தில் தாமே கையெழுத்திட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் வராமல் வேறு ஒருவர் மூலம் சம்பளத்தைப் பெறக் கூடாது என்றும், வராத ஆசிரியர்களின் சம்பளத்தை உடனடியாக தமக்குத் திருப்பி அனுப்புமாறும், வேலணைக் கோட்டக் கல்வி அதிகாரி திரு. சி புலேந்திரன் கடுமையான உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பல ஆசிரியர்கள் கடமைகளுக்கு சமூகமளிக்காததுமல்லாமல் சம்பளப் பணத்தைக் கூட 'டி' படிவங்களின் மூலம் வேறு ஆசிரியர்களைக் கொண்டு பெற்று வந்ததை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ப-17)

### மண்வெட்டி விநியோகம்

உடுவில் கமநல சேவை நிலையத்தினால் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மண்வெட்டி விநியோகம் செய்யப்படவுள்ளது.

மண்வெட்டி தேவைப்படும் சுன்னாகம் தெற்குப்பகுதி விவசாயிகள் விவசாய விரிவாக்க உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். (ப-2)

### உடுத்துறையில்

## அறிவித்தல்

05 03 91 அன்று செவ்வாய்க்கிழமை இலட்சுமி அம்மா புங்குடுதீவு-5 காலமானார். அவரது தசாகம் 14. 03 91 அன்று நடைபெறும் என்பதை அறியத் தருகிறோம்.

தகவல்
நா. ஸ்ரீநிவாசகக் குருக்கள்
புங்குடுதீவு
03053



## மணமகள் தேவை

வீடியோப் படம் பிடித்தலைத் தொழிலாகக் கொண்டவரும் வீடியோ ஸ்தாபனம் ஒன்றின் உரிமையாளருமான அழகிய படித்த மணமகனுக்கு; படித்த அழகிய நற்குணமுள்ள மணப்பெண் தேவை எம்மதமும் எவ்வினமும் சம்மதம்.

(சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது)

ஜாதகம் மற்றும் புகைப் படத்துடன் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள்.

**வீ. எம். பத்மநாதர்**
நுணாவில் கிழக்கு, கல்வயல் றோட்,
சாவகச்சேரி.

03055



... PROF. சத்திய தாஸன், ஞானம் ஸ்ரோர்ஸ், சித்தன்கேணி
03050

### தேவை

இலுப்பை அரைப்பு தேவை தொடர்பு மில்க் வைற் - யாழ்ப்பாணம்
03048

### புத்தகம்

இர. சந்திரசேகரனின் 'விந்தைகள் செய்த விஞ்ஞானிகள்' இரண்டாம் பதிப்பு வெளிவந்துள்ளது ஆசிரியர், மாணவர், விஞ்ஞான விஷயங்களில் அக்கறை உள்ளவர்கள் படிக்க வேண்டிய நூல். விலை ரூபா 25/- வித். பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம்
03030

### சேவை

புளொக் (Block) புகைப் படம் றபர் சீல் - கலர் படம் - ஓவியம் பிறேம் போடுதல் கலர் பிலிம் கழுவுதல் கிரிக்கேசிமுதலியவற்றிற்கு நாடுங்கள்: கொழும்பு ஸ்ருடியோ - யாழ்ப்பாணம் 03049


... இதற்கான வேட்பாளர் மனுக்கள் இம்மாதம் 21 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை ஏற்கப்படவுள்ளன.

வடக்கு கிழக்குப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய 17 மாவட்டங்களில் 10 மாநகர சபைகளுக்கும், 33 நகரசபைகளுக்கும், 194 பிரதேச சபைகளுக்கும் நடைபெறவுள்ள இத்தேர்தலில் 87 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர்.

வடக்கு கிழக்குப் பகுதியில் உள்ள இரு மாநகரசபைகளுக்கும், ஆறு நகரசபைகளுக்கும், அறுபத்திமூன்று பிரதேச

## ...மலையில் யாத்திரை ஆரம்பம்

கத்தோலிக்க யாத்திரை ஸ்தலமாகிய ஹினிதுமகலவாரி மலைக்கான வருடாந்த யாத்திரைகள் ஆரம்பமாகியுள்ளன.

இப்புனித காலமானது 'உயிர்த்த ஞாயிறு' வுடன் முடிவடையும். அங்கு செல்லவுள்ள யாத்திரிகர்களின் வசதி கருதி புனித ஆன் தேவாலயத்துக்கும், இம் மலைக்கும் இடையே ஜின் கங்கைக்கு மேலாகச் செல்லும் மரப்பாலம் திருத்தப்பட்டுள்ளது. (16)

... தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். (ப-2)

## உடுத்துறையில் சாரணர் பயிற்சி

பருத்தித்துறை கிளிநொச்சி மாவட்டம் இணைந்து நடாத்தும் சாரணர் அறிமுகப் பயிற்சி அவத்தை 1 மே மாதம் உடுத்துறை மகாவித்தியாலயத்தில் நடைபெற உள்ளது.

பளை, வரணி, உடுத்துறை நாகர்கோவில ஆகிய கோத்தணிகளில் உள்ள ஆசிரியர்கள் இப்பயிற்சியில் கலந்து கொள்ள முடியும் பயிற்சிக்கட்டணம் 30 ரூபா ஆகும். (43)

## 80 ஆயிரம் கோடி டொலர் செலவில்
# குவைத்தில் பெரும் புனரமைப்பு வேலை!

குவைத் விடுதலை பெற்றதை அடுத்து இலங்கையின் வேலை வாய்ப்பு முகவர்கள் மத்தியில் புதிய உற்சாகம் ஏற்பட்டுள்ளதாம்.

குவைத்தில் மிகப் பெரும் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. ஏற்கனவே இது சம்பந்தமாக 192 ஒப்பந்தங்களில் குவைத் கைச்சாத்திட்டுள்ளது.

இடிபாடுகளைச் சுத்திகரிப்பது முதல், கட்டிடங்கள், தண்ணீர்க் குழாய்கள் அமைப்பு, மின்சாரம், வீதிகள், தகவல் தொடர்புகள் போன்ற பல அம்சங்கள் மீண்டும் அங்கு புனரமைக்கப்பட உள்ளன.

வட அமெரிக்கா உட்பட பல வெளிநாடுகளின் பொறியியலாளர்களின் சேத மதிப்பீட்டிற்குப் பின் பிரமாண்டமான புனரமைப்பு நடைபெற உள்ளது. இதற்கு 80 ஆயிரம் கோடி டொலர்கள், இலங்கை நாணயப்படி 32 இலட்சம் கோடி ரூபா செலவிடப்பட உள்ளது எனத் தெரியவந்துள்ளது.

(ப-10)

# ரஞ்சனை கொல்ல 80 கிலோ குண்டு!

## கொழும்பில் வெடித்த மிகப்பெரிய குண்டு இதுவே!!

அமைச்சர் ரஞ்சனைக் கொலை செய்யப்பயன்படுத்தப்பட்ட குண்டு 80 கிலோ நிறையுடையது எனத் தற்போதுதெரியவந்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இதுவரை வெடித்தகுண்டுகளில் இதுவே மிகவும் நிறை கூடியது என்பதை பத்திரிகையாளர் மகாநாட்டில் ஜெனரல் ரணதுங்க ஒப்புக்கொண்டார்.

அமைச்சர் ரஞ்சன் கொலை தொடர்பாக அவரின் பாதுகாப்புக்கு பொறுப்பாக இருந்த படை வீரர்கள் மீது நடவடிக்கை யெடுக்கப்படுமா என நிருபர் ஒருவர் கேட்ட போது-

'அவருக்கு பாதுகாப்பாகச் சென்ற படை வீரர்கள் அனைவரும் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டு விட்டனர். அமைச்சர் ரஞ்சன் எப்போதும் பிஸியானவர். எனவே அவர் துரிதமாகச் செயற்படுவார். திடீர் திடீர் என அவரும் இங்கும் போவார். இந்த விவகாரத்தில் யார் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கமுடியாது. எந்த அதிகாரியையும் குறை கூறமுடியாது என ஜெனரல் பதிலளித்தார்.

இந்த மகாநாட்டில் அமைச்சர் ரனில் விக்கிரமசிங்க, இராஜாங்க அமைச்சர் ரணசிங்க, பிரட்மன் வீரக்கோன் ஆகியோர் சமூகமளித்திருந்த போதிலும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகசிறில்ரணதுங்கவே பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. (74)

## 2005 ஆம் ஆண்டில் ஆசியாவில் மக்கள் தொகை 75 சதவீதம் அதிகரிக்கும்

2005 ஆம் ஆண்டளவில் ஆசியாவிலும், வட ஆபிரிக்காவிலும் உள்ள வளரும் நாடுகளில் மக்கள் தொகை 75 சதவீதம் அதிகரிக்கும் என சோவியத் அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

உலகின் மொத்த மக்கள் தொகையில் ஆசிய நாடுகளின் மக்கள் தொகை 2005 ஆம் ஆண்டில் 40 சத வீதமாக இருக்கும்.

ஈரானிலும் எண்ணெய் ஏற்றுமதி செய்யும் அரபு நாடுகளிலும் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் உயர்ந்தபட்ச அளவுக்கு இருக்கும்.

தென்கொரியாவிலும் சிங்கப்பூரிலும் மக்கள் தொகை வளர்ச்சி குறைந்த பட்ச அளவில் இருக்கும் எனவும் இவர்கள் தெரிவித்துள்ளனர். (74)

## மத்திய கிழக்கு நாடுகளுக்கான விமானசேவைகள்மீண்டும் ஆரம்பம்

மத்திய கிழக்குக்கான விமான சேவைகள் பலவற்றை எயர் லங்கா மீண்டும் ஆரம்பித்துள்ளது.

ரியாத்துக்கான விமான சேவை 11 ஆம் திகதியும், துபாய், அபுதாபி நாடுகளுக்கான சேவை 12 ஆம் திகதியும், தெஹ்ரானுக்கான சேவை 14 ஆம் திகதியும், பஹ்ரெய்னுக்கான சேவை 16 ஆம் திகதியும் ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

துபாய், அபுதாபிக்கான சேவைகள் முறையே லண்டன், அம்ஸ்ரடாம் வரை நீடிக்கப்படவுள்ளன. (74)

## இடம் மாற்றம்

தெல்லிப்பழை பிரதேச சபையின் பொது நூல் நிலையம் மல்லாகம் ஞானப்பிரகாசம்சனசமூக நிலையத்திற்கு இடம்மாற்றப்பட்டுள்ளது.

## நாடுமுழுவதும் குடிசனமதிப்பீடு இவ்வருடம் மேற்கொள்ளப்படும்

இவ்வருடம் குடிசன மதிப்பீட்டை நாடுமுழுவதும் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடைசியாக 1981ஆம் ஆண்டு குடிசன மதிப்பீடு நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

பத்துவருடங்களுக்கு ஒரு முறை குடிசன மதிப்பீடு எடுக்கப்படுவதுவழமை. (34)

## அமைச்சரவையில் விரைவில் மாற்றம்! முக்கிய அமைச்சுக்களிலும்மாற்றம்?

அமைச்சரவையில் விரைவில் மாற்றம் செய்யப்படவுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி பிரேமதாஸ கடந்த இரு வருடங்களாக வருடா வருடம் தனது அமைச்சரவையில் மாற்றம் செய்து வருவது வழமையாகி விட்டது.

அத்துடன் முக்கிய சில அமைச்சுக்களில் ஏற்பட்ட வெற்றிடங்களுக்குத் தகுதியானவர்கள் நியமிக்கப்படவில்லை என்ற ஒரு அபிப்பிராயமும் ஆளும்கட்சி வட்டாரங்களில் ...

இதனால் முக்கிய மாற்றங்களை உள்ளடக்கியதாக அமைச்சரவை மாற்றியமைக்கப்படலாம் எனவும் அவதானிகள் தெரிவிக்கின்றனர். (16)

## சிங்களத்தில் விண்ணப்பப் படிவங்கள் அனுப்பியவை இங்கு திரும்பி வருகின்றன

சுயவிருப்பின் பேரில் ஓய்வு பெற விண்ணப்பித்தபின் அரச ஊழியர்களுக்கு ஓய்வூதியம் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் சிங்கள மொழியிலேயே உள்ளதாகத் ... மொழியில் அச்சிடப்பட்ட படிவங்கள் இங்குள்ள பல திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

சிங்களத்தில் நிரப்பும்போது ...

# தி. மு. க. ஆட்சிக் கலைப்பின் பின்னணி

தமிழக ஆட்சி பீடத்தில் இருந்த தி. மு. க. அரசைக் கலைப்பதற்கு சந்திரசேகரும், அவரைச் சார்ந்தோரும், ஜெயலலிதாவும் கோஷ்டியும் பட்டபாடும் அவஸ்தையும் கொஞ்சநஞ்சமல்ல. இப்போது அவர்கள் சொல்லமாட்டாமல் விழுங்கியதையும், விழுங்கமாட்டாமல் கக்கியதையும் சில ஏடுகள் ஒருசேரஎடுத்துக்காட்டி வருகின்றன. இந்தத் தி மு க ஆட்சிக்கலைப்பின் பின்னணியை அவற்றினூடாகப் பார்ப்பதனால் சில அடிப்படை உண்மைகளை அறிய வாய்ப்புக் கிடைக்கலாம்.

'தமிழக ஆட்சியை எப்படியும் கலைத்தே விடுவது' என்று ஏற்கனவே முடிவெடுத்தாயிற்று. அதற்கு வேண்டிய காரணங்களைச் சந்திரசேகர் அரசு தேடி அலைந்து கொண்டும் சோடித்துக்கொண்டும் இருந்தது.

தமிழ்நாட்டில் தனிப்பெரும்பான்மை இடங்களுக்குப் போட்டியிட்டு அ. தி. மு. க. தனித்தே மந்திரிசபை அமைக்கும் என ஜெயலலிதா பிடிவாதமாகப் பலமுறை கூறிவந்தார். 'தி.மு.க. ஆட்சியைக் கலைக்க வேண்டுமானால் கேரளா பாணியில் கூட்டணி ஆட்சிக்கு ஜெயலலிதா சம்மதிக்கவேண்டும்' என்றும் 'முதல் அமைச்சர் பதவிக்கு அவரை ஏற்றுக்கொள்ளத்தயார்' என்றும் இந்திரா காங்கிரஸ், சந்திரசேகரின் ஜனதாதளம் (எஸ்) கட்சிகள் சார்பில் கண்டிப்பான நிபந்தனையுடன் பேரம் பேசப்பட்டு வந்தது.

வாழப்பாடி இராமமூர்த்தியும் 'தமிழ்நாட்டில் இனி கூட்டணி ஆட்சி, தேர்தலுக்குப்பிறகு ஜெயலலிதாவை முதல்வராக ஏற்கத்தயார்' என்றார்.

ஜெயலலிதாவை மட்டும் ஆட்சியில் அமர்த்திப் பார்க்காமல் காங்கிரசும் பங்கு கொள்ளும் கூட்டணி ஆட்சி ஏற்பட அ. தி. மு. க. சம்மதித்தால் தி மு. க. ஆட்சி டிஸ்மிஸ் ஆவதை ஆதரிக்க மூப்பனார் குழுவினரும் முன்வந்தனர்.

கூட்டணி ஆட்சிக்கு இறுதியானபேரம் பூர்த்தியாயிற்று. உல்ஃபாக்களுடன் விடுதலைப்புலிகளுக்கும், தி. மு. க. அரசுக்கும் தொடர்பு என்ற குற்றச்சாட்டை இந்திரா காங்கிரஸ் அ. தி. மு. க, ஜனதாதளம் (எஸ்) ஆகிய மூன்றும் தீவிரமாகப் பிரசாரம் செய்யத்தொடங்கின.

கூட்டணிஆட்சி பற்றிப்பேசி ஜெயலலிதாவைச் சம்மதிக்க வைக்க முன்னதாகவே மத்திய மந்திரி சுப்பிரமணியசுவாமி சென்னைக்கு வந்து ஏற்பாடுகளைச் செய்தார்.

அதன்பின் சந்திரசேகரே காஞ்சி சங்கராச்சாரியாரைத் தரிசனம் செய்வதாகக்கூறி, விமானப்படையின் தனி விமானத்தில் வந்தார்.

தரிசனத்தை முடித்துவிட்டுச் சென்னையில் ஜெயலலிதாவுடன் தேநீர் அருந்திப், பேச்சு நடத்திவிட்டு அவருக்கு அதிருப்தி ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக மாநில முதல்வர் கருணாநிதியைச் சந்திக்காமலே டெல்லிக்குப் பறந்தார்.

சந்திரசேகர் ஜெயலலிதாவைச் சந்தித்த போது அந்தோனி ஜெனரல் ஜி. ராமசாமி ...

எனவே அசாம் விடுதலைப்போராளிகளுக்கு புலிகள் ஆயுதம் வழங்கிப் பயிற்சியும் அளித்து வருகிறார்கள் என்றும் தமிழ்நாட்டில் தமிழக அரசின் ஆதரவுடன் உல்ஃபாக்களுக்குப் பயிற்சி முகாம்கள் உள்ளன என்றும் பிரசாரங்கள் உசார்ப்படுத்தப்பட்டன.

கல்கத்தா இந்திரா காங்கிரஸ் ஆதரவுப் பத்திரிகை இப் பிரசாரத்தைத் தொடங்கி வைத்தது. உல்ஃபாக்களுடன் புலிகளுக்கு நெருங்கிய தொடர்பு உண்டு என்பதற்குச் சாட்சியங்கள் கிடைத்துள்ளதாக அஸாம் கவர்னர் தாகூர் கூறிய தகவலே இப்படிப் பிரசாரமானது.

சந்திரசேகரும் இப்பிரசாரத்தில் அ. தி. மு. க. வையும், காங்கிரசையும் ஊக்கப்படுத்த, உல்ஃபாவோடும், ஆந்திரா நக்சல்பாரிகளோடும் புலிகளுக்குத் தொடர்பிருப்பது பற்றி 'அதிர்ச்சியும், வேதனையும் தரக் கூடிய ஆதாரங்கள்' மத்திய அரசிடம் இருப்பதாகக் கூறினார்.

தமிழ்நாட்டில் உல்ஃபா முகாம் இருப்பதை நிரூபிக்க முடியுமா? என முரசொலி மாறன் சவால் விட்டார். பதிலே இல்லை.

பாராளுமன்றம், மேலவை இரண்டிலும் தி. மு. க. அரசை கலைக்க வேண்டும் என்று அ. தி. மு. க., காங்கிரஸ் உறுப்பினர்கள் ஏககாலத்தில் குரல் எழுப்பினமையும் சந்திரசேகர் தி. மு. க. மீது பழி சுமத்தியமையும் ஒத்திகை பார்க்கப்பட்ட நாடகமாகவே அமைந்தன.

மத்திய அரசின் குரூரப் போக்கைத் தெளிவாக உணர்ந்த பிறகே எதையும் சந்திக்கத் தயார் என்று கருணாநிதி அறிவித்தார்.

சந்திரசேகர் "மத்திய அரசுக்குக் கருணாநிதி சவால்களை விடுத்து வருகிறார். டெல்லியுடன் அவர் மோதவேண்டாம். சென்னையில் இருந்து மத்திய அரசு நடத்தப்பட்ட காலம் மலையேறி விட்டது" என்று கடுமையாக எச்சரித்தார்.

'கருணாநிதியிடம் கூறிய இரகசியத் தகவல் யாழ்ப்பாணத்திலுள்ள புலிகள் தலைமையகத்திற்குப் போய்ச் சேர்ந்துள்ளது' என்றும் கடுமையாகக் குற்றஞ் சாட்டினார். இதனால் தி. மு. க. வைக் கலைக்கப் பொருந்தக் கூடிய தேசத் துரோகக் குற்றத்தைச் சுமத்திவிட்டார்.

வரவிருக்கும் பொதுத் தேர்தலில் அ. தி. மு. க., இந்திராகாங்கிரஸ், ஜனதாதளம்(எஸ்) கூட்டணி அமைத்துப் போட்டியிடப் போவதற்காகக் கொடுக்கப்பட்ட களப்பலியே தி.மு.க. ஆட்சிக் கலைப்பு.

'நாட்டின் எதிர்கால நலனை மனதில் தி. மு. க. கொள்ளவில்லை. மக்கள் எண்ணத்தைப் பிரதிபலிக்கத் தவறிவிட்டது. ஆகவே தான் தி. மு. க. ஆட்சி கலைக்கப்பட்டது என அ. தி. மு. க. துணைச் செயலர் எஸ். டி. சோமசுந்தரம் கூறுகிறார். எல். ரி. ரி. ஈ. யின் சமூக விரோத நடவடிக்கைகளைக் கண்டும் காணாமல் தி. மு. க. இருந்திருக்கிறது' அதனாலேயே அவர்கள் ஆட்சி கலைக்கப்பட்டது என்கிறார் ஜெயலலிதா.

இவர்களிடையேயான புதுடெல்லித் தேர் ...

அத்துடன் முக்கிய சில அமைச்சுக்களில் ஏற்பட்ட வெற்றிடங்களுக்குத் தகுதியானவர்கள் நியமிக்கப்படவில்லை என்ற ஒரு அபிப்பிராயமும் ஆளும் கட்சி வட்டாரங்களில் நிலவி வருகின்றது.

சுயவிருப்பின் பேரில் ஓய்வு பெற விண்ணப்பித்த பின் அரச ஊழியர்களுக்கு ஓய்வூதியம் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் சிங்கள மொழியிலேயே உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றன.

கொழும்பில் இருந்து சிங்கள மொழியில் அச்சிடப்பட்ட படிவங்கள் இங்குள்ள பல திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

சிங்களத்தில் நிரப்பும்போது பிழைகள் ஏற்பட்டு பல விண்ணப்பங்கள் இங்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ப-1)

## 60ரூ. பெறுமதியான உணவுமுத்திரை மாணவருக்கு மாதாந்தம் கிடைக்கும்

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள பத்தொன்பது பாடசாலைகளின் மாணவர்களுக்கும் மதிய உணவு முத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மாணவர்களின் உணவு முத்திரைகளுக்கு ஏற்ற பொருள்களை வழங்குவதற்கு வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

ஒரு மாணவன் ஆகக்கூடுதலாக அறுபது ரூபா பெறுமதியான உணவு முத்திரையையே ஒரு மாதத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் இடம்பெயர்ந்து வந்து பாடசாலைகளில் படிக்கும் மாணவர்களுக்கும் இம் மதிய உணவு முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன. (43)

## சட்டத்தரணிகள் சங்க தலைவர் தெரிவு

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி ரஞ்சித் அபேய சூரிய 1326 பெரும்பான்மை வாக்குகள் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

செயலாளராக உபுல் ஜயசூரியா 1012 அதிகப்படி வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார். (74)

## அணு ஆயுதம் இல்லையென நிரூபிக்கப் பாகிஸ்தானுக்கு காலக்கெடு!

## தவறினால் நிதிஉதவி நிறுத்தப்படுமென அமெரிக்கா எச்சரிக்கை!!

பாகிஸ்தான் தன்னிடம் அணுஆயுதம் இல்லை என்பதை இவ்வருடம் அக்டோபர் மாதத்துக்குள் நிரூபிக்கத் தவறினால் பாகிஸ்தானுக்கான நிதியுதவி அனைத்தும் நிறுத்தப்படுமென அமெரிக்கா எச்சரித்துள்ளது.

அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையும், ஆசிய பசுபிக் வெளியுறவு அமைச்சர்களின் துணைக் கமிட்டியும் இது தொடர்பான அறிவுறுத்தல்களை அமெரிக்க ஜனாதிபதிக்கு வழங்கியுள்ளன.

தன்னிடம் அணுஆயுதம் எதுவும் இல்லையெனப் பாகிஸ்தான் தெரிவித்து வருகின்றபோதிலும் நவீன அணுஆயுதங்களை பாகிஸ்தான் கொண்டுள்ளதென சர்வதேச இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்து வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக மாநில முதல்வர் கருணாநிதியைச் சந்திக்காமலே டெல்லிக்குப் பறந்தார்.

சந்திரசேகர் ஜெயலலிதாவைச் சந்தித்தபோது அற்றோனி ஜெனரல் ஜி. ராமசாமியும் உடன் இருந்தார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் ஆட்சியைக் கலைக்க வேண்டுமானால், தனிப்பட்ட ஊழல் புகார்களைக் கூறி சட்டம் ஒழுங்கு சரியில்லை என்று சொன்னால் மட்டும் போதாது என்பதை அவர் விளக்கியதாக நம்பப்படுகிறது.

இதன் விளைவே தங்களுக்குப் பகையான விடுதலைப்புலிகளையும் பழிதீர்த்து, தி. மு. க. ஆட்சியையும் வீழ்த்த வகுத்த திட்டம். விடுதலைப்புலிகளால் தமிழ்நாட்டில் ஆயுதக் கடத்தல் நடப்பதாகவும் விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தில் தமிழகக் கடலோர மாவட்டங்கள் இருப்பதாகவும் பழியைச் சுமத்தி இந்தப் பழியில் தி. மு. க. அரசுக்கும் நிறையப் பங்கு உண்டு என்று தேச விரோதக் குற்றச் சாட்டைச் சுமத்தத் தம் ஜென்ம விரோதியாக தி. மு. க. அரசைக் கருதும் மத்திய அரசின் உளவு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் திட்டம் வகுத்துக் கொடுத்துத் தமிழகத்தில் பிரசாரத்தையும் செய்தனர்.

பஞ்சாப், காஷ்மீர் மாநிலத் தீவிரவாதிகளுக்குப் பாகிஸ்தான் பயிற்சியும், ஆயுதங்களும் வழங்கி வருவது உலகறிந்த இரகசியம்.

இந்தத் தீவிரவாதிகளுடன் தி. மு. க. வையும் தமிழீழப் புலிகளையும் இணைத்து முடிச்சுப்போட முடியவில்லை.

காணாமல் தி. மு. க. இருந்திருக்கிறது" அதனாலேயே அவர்கள் ஆட்சி கலைக்கப்பட்டதென்கிறார் ஜெயலலிதா.

இவர்களிடையேயான புதுடெல்லித் தேர்தல் கூட்டு ஒப்பந்தத்தில் நன்றாக விட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது. சட்டப் பேரவைக்கான தேர்தல் தொகுதிகள் மொத்தம் 234. அ. தி. மு. க. வுக்கு 168 தொகுதியும், இந்திரா காங்கிரசுக்கு 66 தொகுதியும் ஆகப் பங்கிடப்பட்டுள்ளன. ஏப்பிரல் மாதம் தேர்தலை நடத்த வாழப்பாடியும், ஜெயலலிதாவும் விருப்பம் தெரிவித்திருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

தேர்தலில் இந்த அணி ஜெயித்தால், ஜெயலலிதா முதல் மந்திரிப் பதவி வகிக்க. ராஜீவ் சம்மதித்த போதிலும் இந்திரா காங்கிரஸ் ஒத்துழைப்பு இல்லாமல் அவர் ஆட்சியில் நீடிக்க முடியாதவாறு அவரைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவும் தீர்மானித்துள்ளார்.

வடமாநிலங்களில் வி. பி. சிங்கின் ஜனதா தளம், பாரதீய ஜனதா ஆகிய கட்சிகளுக்கு ஆதரவு பெருகி, ராஜீவின் செல்வாக்கு மூன்றாம் இடத்தையே வகிப்பதாக ஒரு கணிப்பு கூறுகிறது. எனவே தென் மாநிலங்களில் தன் செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டு விட்டது.

இத்தகைய பின்னணிகளோடு ஏனைய காரணிகளும், சேர இந்திரா காங்கிரஸ், அ. தி. மு. க., ஜனதாதளம் (எஸ்) மூன்றும் இணைந்து தான் தி. மு. க. ஆட்சிக்குக் 'கழுத்தறுத்திருக்கின்றன' என்பது வெளிப்படை. இது பாரத அரசியலில் ஏற்பட்டுள்ள வீக்கமா? வளர்ச்சியா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

★ அரசாங்க அதிபர் கொழும்பில் எடுத்த முயற்சியால்

# யாழ்மாவட்ட முக்கிய தேவைகளுக்கு 163 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாண மாவட்டத்தின் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கை மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு முத்திரை, வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கான உணவு முத்திரை, ஓய்வூதியம் என்பவைகளுக்கு 240 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக யாழ் அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிறட் கொழும்பில் வைத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டிருந்தார்.

ஆனால் இவற்றிற்கு 150 மில்லியன் ரூபாவை மட்டுமே அரசாங்கம் வழங்கியிருப்பதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை 1989-90-ம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை இவ்வாண்டில் பயன்படுத்த 13 மில்லியன் ரூபா வழங்கப்படவுள்ளது. (66)

## வகுப்புகள் மாற்றம்

நல்லூர் தெற்கில் இயங்கி வந்த விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவ மாணவிகளின் பாதுகாப்புக்கருதி யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மண்டபங்களில் மாலை நேரப்பாடசாலையாக நடாத்தப்பட்டு வருகிறது.

பிற்பகல் 1 மணிக்கு ஆரம்பமாகும் இப்பாடசாலை மாலை 5-30 மணி வரை நடைபெற்று வருகிறது. (27)

## வவுனியாவில் இருந்து மா லொறிகளில் எடுத்துவர ஏற்பாடு

யாழ். மாவட்டத்துக்குத் தேவையான மாவை வவுனியா உணவுக் களஞ்சியங்களில் இருந்து தருவிக்க உணவு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிறட் உணவு, கூட்டுறவுத்துறை அமைச்சுடனும் கூட்டுப்படை தலைமையகத்துடனும் இது குறித்து நடாத்திய பேச்சுவார்த்தைகளையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டது. (66)

## சைக்கிளில் சென்ற பெண் சேலை சிக்கி விழுந்து மரணம்

வல்வைப் பாலத்தடியால் மகனுடன் சைக்கிளில் சென்று கொண்டிருந்த தாயொருவர் சேலை சைக்கிள் சில்லுக்குள் சிக்கியமையால் சைக்கிளால் விழுந்து தலையில் ஏற்பட்ட இரத்தப் பெருக்கினால் மரணமானார்.

பருத்தித்துறை புலோலி மேற்கு வண்ணாந்துறையைச் சேர்ந்த திருமதி. கணபதிப்பிள்ளை பரமேஸ்வரி (42) என்பவரே மரணமானவராவர். (15)

## பருத்தித்துறை இலங்கை வங்கியில் 4000 ரூபா நிவாரணம்

பருத்தித்துறை இலங்கை வங்கியில் இம்மாதம் 9 ஆம், 16 ஆம் திகதிகளில் 1637 குடும்பங்களுக்கு சுய தொழில் முயற்சிசார் நிவாரணம் 4000 ரூபா வழங்கப்படவுள்ளதாக வங்கி அறிவித்துள்ளது.

அதன் விவரம் வருமாறு:-
9 ஆம் திகதி மந்திகை-396, பருத்தித்துறை நகரம் - 379, பருத்தித்துறை கிழக்கு-67,
16 ஆம் திகதி: புலோலி தெற்கு - 213, பொலிகண்டி கிழக்கு, 393, பொலிகண்டி மேற்கு - 189.

இன்றைய போர்க்கால சூழ்நிலைகளையடுத்து அவசிய மேற்படின் இக் கொடுப்பனவுகளில் மாற்றங்கள் நிகழலாம் என்றும் வங்கி அறிவித்துள்ளது. (15)

## தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனாதிபதிக்கு கடிதம்

# வடக்கில் இராணுவ நடவடிக்கையை நிறுத்தி பேச்சுவார்த்தையை ஆரம்பியுங்கள்

வடக்கில் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி உடன் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

வல்வெட்டித்துறை இப்பொழுது நகரமாக இல்லை. கட்டிடங்கள் தரை மட்டமாகிவிட்டன ஆகாயத் தாக்குதல் மட்டுமன்றி பலாலி முகாமிலிருந்து! ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது எனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த அழிவுகளுக்கு எந்த நியாயமும் கூறமுடியாது. உள் நாட்டுத் தகராறு தொடர்பான ஜெனிவா உடன்பாட்டுக்கு இது முரணானது.

சகல அரசியல் கட்சிகளும் இத் தாக்குதல்களைக் கண்டித்து மனிதாபிமான ரீதியில் சமாதானம் காண நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு கூட்டணி கேட்டுள்ளது. (11)

## தென்பகுதி தொழிற்சங்கங்கள் வடக்கில் செயலிழப்பு

வடபகுதியில் உள்ள சில தொழிற்சங்கங்கள் தற்போதைய சூழ்நிலை காரணமாக இயங்க முடியாதிருப்பதால் அவற்றில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

தென்னிலங்கையில் உள்ள தலைமையகத்துக்கு இச் சங்கங்கள் தமது அங்கத்தவர்களின் தேவைகள் குறித்து பல கடிதங்கள் எழுதியும் எதுவித பதிலும் அங்கிருந்து வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக, தமது சம்பளத்தை பணமாக வழங்க தொழிற்சங்கங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசி நடவடிக்கை எடுக்குமாறு பல தடவைகள் கேட்டும் எவ்வித பலனும் கிடைக்கவில்லையாம்.

இதனால் இங்குள்ள தமிழ்த் தொழிலாளர்கள் பெரும் அதிருப்தி யடைந்துள்ளதுடன் அவற்றில் இருந்து விலகுவதற்கும் தீர்மானித்துள்ளதாக தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (33)

## படித்த யுவதிகளுக்கு குறுகிய காலப் பயிற்சி

யாழ்ப்பாணம் திருநெல்வேலி அரசினர் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் படித்த யுவதிகளுக்கான குறுகிய காலப் பயிற்சி நெறி எதிர்வரும் 12ம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட இருப்பதாக பண்ணை முகாமையாளர் திருமதி தனவதி கந்தசாமி அறிவித்துள்ளார்.

இப் பயிற்சி பெற விண்ணப்பித்த யுவதிகளையும், பயிற்சிக்கு இதுவரை விண்ணப்பிக்காத யுவதிகளும் அன்றைய தினம் விண்ணப்பத்துடன் சமூகமளிக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

இப் பயிற்சியில் மனைவிசால் விவசாயம், கைப்பணி, தையல், மிருக பரிபாலனம் போன்ற பயிற்சிகள் அளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (33)

## ஆஸ்பத்திரி அபிவிருத்திக்கு ஒருவாரம் கொடி விற்பனை

மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியின் நலன் கருதி கொடி விற்பனை ஒரு வாரம் இடம்பெற்றது.

இதன் ஆரம்ப விழா அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சி பிரசாரப் பொறுப்பாளர் திரு. அரண்ணா இவ்வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சங்கம் மேற்கொள்ளும் அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளை அவர் பாராட்டிப்பேசியதுடன் இங்குள்ள ஊழியர்கள் தூய்மையான பணியினை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்,

மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை பிரான்ஸில் வைத்தியக் குழு சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் ஜோமான் ஹைத், உட்பட இப்பகுதி உயர் அதிகாரிகளும் பிரமுகர்களும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இக் கொடி விற்பனை மூலம் சேகரிக்கப்படும் பணம் ஆஸ்பத்திரி அபிவிருத்தி வேலைகளுக்கு பயன்படுத்தப்படும். (15)

## உணவுப் பொருள் போதாது கூட்டுறவு ஆணையாளர் கடிதம்

வடபகுதியில் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், அதனை உடனடியாக நீக்க தக்க நடவடிக்கை எடுக்குமாறும் யாழ் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ் லிங்கநாதன், வட கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளருக்கு கடித மூலம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போதைய நிலையில் பலர் தொழிலின்றி இருப்பதாகவும், அதனால் வருமானம் இழந்து அவர்களின் குடும்பங்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்குகின்றனர் எனவும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தற்கொலை...

முடைந்த வாலிபர் ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்ட பரிதாபகரமான சம்பவம் இந்தல்சேணி கிழக்கு தாவளை என்னும் கிராமத்தில் இடம் பெற்றுள்ளது.

கடந்த புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சுப்பிரமணியம் கணேசமூர்த்தி (23) என்பவரே இவ்வாறு கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டவராவார், (12)

## குவைத் விமான சேவையில் பணிபுரிந்தோருக்கு அழைப்பு

குவைத் விமான சேவையுடன் தொடர்பான தொழிலில் ஈடுபட்ட இலங்கையரை குவைத் விமான சேவையின் கொழும்புத்தலைமையகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

குவைத் விமான சேவையில் பணிபுரிந்த அநேக இலங்கையர் ஈராக்கிய படையெடுப்புடன் நாடு திரும்பியுள்ளதாகவும் இவர்களை மீண்டும் சேவையில் சேர்த்துக்கொள்ள குவைத் விமானத்துறை தீர்மானித்துள்ளதாகவும் குவைத் விமான சேவைக்கான கொழும்பு பணிப்பாளர் தாலிப் அல்முபராக் தெரிவித்துள்ளார்.

குவைத் தலைநகர் விமான தளம் முற்றாகவே ஈராக்கினால் அழிக்கப்பட்டுள்ள இதை புனர் நிர்மாணம் செய்ய இரண்டு வாரங்கள் பிடிக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## இடைக்கால ஓய்வூதியம் கிடைக்கவில்லை

கல்வித்திணைக்களத்தில் இருந்து இடைக்கால ஓய்வூதியம் பெறும் ஓய்வூதிய காரர்களுக்கு தை மாசி மாதத்திற்குரிய இடைக்கால ஓய்வூதியம் இன்னமும் கொடுக்கப்படவில்லை.

இதனால் ஓய்வூதிய காரர்கள் மிகவும் கஷ்ட நிலைமையில் உள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (33)

தீவுப்பகுதிகளில்—
லாய் நோக்கியும் பலாலி முகாமிலிருந்து ஷெல் தாக்குதல் நடைபெற்றது. (71)

## கிராம சேவகர்களிடம் பதிவுப்புத்தகங்கள் இல்லை

மடுமாகா...

கடந்த வருடம் ஜூன் மாதத்திற்குப்பின்னர் இராணுவ நடவடிக்கைகளின் போது மரணமானவர்களின் விபரங்களைப் பதிவதற்கு கிராம சேவகர்களிடம் இறப் பதிவுப்புத்தகம் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பாதிக்கப்பட்டவர்கள் கிராம சேவகர்களிடம் இதற்காக அலைந்து திரிகின்றனர்.

கொழும்பில் இருந்து இது பற்றிய புத்தகங்கள் இங்கு வந்துசேரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (33)

---

### பல்கலைக்கழகக்...

எதிர் பார்க்கப்பட்டது.

ஆனால் அரசு திட்டமிட்டு, வவுனியாவில் நிறுவும் கல்லூரி பேராதனைப் பல்கலைக்கழகத்தாலும், அம்பாறையில் நிறுவும் கல்லூரி கொழும்பு பல்கலைக்கழகத்தாலும் மேற்பார்வை செய்ய ஏற்பாடுகள் செய்துவருகிறது.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் இக்கல்லூரிகளை அமைக்கும்படி கல்விமான்கள் ஆணைக்குழுவினைக் கோரியபோது. 'இது ஜனாதிபதியின் நேரடிப்பணிப்புரை' என்று தெரிவிக்கப்பட்டது.

---

### ஆட்சி...

தெரிவித்துள்ளார்.

சந்திரசேகரே தொடர்ந்து இடைக்கால பிரதமராக இருக்க வேண்டும். ராஜீவ் காந்தி அல்ல எனவும் அவர் குறிப்பிட்டார்

---

### சைக்கிளில்—

யினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வவுனியாவிலிருந்து மக்கள் வெளியிடங்களுக்கு சொப்பின் பைகளிலேயே மண்ணெண்ணை எடுத்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (11

---

சிறப்பித்தனர்.

---

### கணவன்

மணப் போலிச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்திருப்பதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதும் வும் அவர் குறிப்பிட்டார்.

கணவன்மாரை இழந்த விதவைகளுக்கான நஷ்டஈடு வழங்கும் விடயத்தில் அவர்களின் விண்ணப்பங்கள் தீவிர பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (66)

---

### இடைக்கால...

விக்கப்படுகிறது.

சந்திரசேகரின் ஆட்சியை கலைப்பதற்கான நாம் திட்டமிட்டு செயற்படவில்லை இன்னமும் எமது ஆதரவு அவருக்கு உண்டு என பின்னர் ராஜீவ் காந்தி தெரிவித்தார்.

இடைக்கால தேர்தல் நடைபெற்றால் மீண்டும் பெரும்பான்மை அற்ற ஓர் சிறுபான்மை அரசே ஆட்சிக்கு வரும் என தேவிலால் எச்சரித்துள்ளார். இதைவிட தேர்தல் பணவிரயத்தையே ஏற்படுத்தும் என அவர் தெரிவித்தார்.

---

### மடுமாதா...

கத்தோலிக்க திருச்சபை வட்டாரங்கள் மௌனம் சாதிப்பதாகவும் அந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மடுமாதா தேவாலயம் இலங்கையில் கத்தோலிக்கர்களின் புனிதயாத்திரை ஸ்தலம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (33)

---

### புதிய...

தத் தெரிவித்தனராம்.

ரஞ்சன் மறைந்து விடவில்லை அவர் வாழ்ந்து கொண்டே இருக்கிறார் என்ற எண்ணத்துடன் சோர்வடையாமல் உங்கள் கடமைகளைச் செய்யுங்கள் என்று ஜனாதிபதி ஈ. பி. டி. பி. தலைவர்களிடம் இச் சந்திப்பின் போது தெரிவித்தாராம்

---

### மட்டக்களப்பிலும்—

கேணிப்பகுதியில் நெல் ஏற்றி வந்த லொறி மீது ஹெலி துப்பாக்கி பிரயோகம் நடாத்தியதில் 3 பிள்ளைகளின் தந்தையான லொறி நடத்துனர் இ. அமரசிங்கம் (30) கொல்லப்பட்டார் மேலும் மாணவர் உட்பட 3 பேர் காயமடைந்தனர். (71)

---

## காலமானார்

### முதலிப்பிள்ளை வல்லிபுரம்

வயாவிளானைப் பிறப்பிடமாகக் கொண்ட முதலிப்பிள்ளை வல்லிபுரம் (இளைப்பாறிய ஆய்வுகூட உதவியாளர் - ம. ம. வி. வயாவிளான்) 08-03-1991-இல் காலமானார்

இவர் கதிராசிப்பிள்ளையின் அன்புக் கணவரும், சிவபாக்கியம், சற்குணம் (ஆசிரியை, பூண்டுலோயா), பத்மநாதன் (எழுதுவினைஞர் - மாவட்டப் பதிவகம், யாழ்ப்பாணம்), சத்தியசீலன் (திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர் கச்சேரி - யாழ்ப்பாணம்), மகாலிங்கம் (மாவட்ட தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்-அலம்பில்). ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராசா (உடையார்கட்டு), தருமலிங்கம் (தேயிலைத் தொழிற்சாலை உத்தியோகத்தர்-பூண்டுலோயா), ஜெகதீஸ்வரி (பகுதிநேர போதனாசிரியை - தொழில் நுட்பக்கல்லூரி யாழ்ப்பாணம்) ரேவதிதேவி, ஜெயலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியை 09-03-91 மாலை 3 மணிக்கு திருநெல்வேலியில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர். நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்:

'வைகுந்தம்'
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

மனைவி மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை.

03056

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிகேஷர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு 'டச்சு வீதி, லஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 10-03-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது,